**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு 2-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | அய்யாவு | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**9.1.2024 OS No.109/2019 பி.வா.சா.1** அய்யாவு **ஆஜர்**
**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:**

1. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். என்னை சாட்சி சொல்ல யார் அழைத்து வந்தார் என்றால் முருகன் அழைத்துவந்தார். நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்திற்கு யார் விபரம் சொன்னது என்றால் நான் நிருபணவாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை. **(சாட்சி பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** முருகன்தான் விபரம்சொன்னார். எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் நான் படிக்காதவன் எனக்கு தெரியாது.

2. நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தில் 2 செண்ட் இடத்தை 1-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததற்கு வாதி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்று சொல்லியுள்ளதில் அது எந்த சர்வே எண் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். முருகன்,ராமநாதனும் வீடு கட்டியுள்ளதில் வீட்டின் சர்வே எண் தெரியாது என்றால் சரிதான். தாவா வழக்கின் விபரம் தெரியாது என்றால் சரிதான்.

**( மறு விசாரணை இல்லை.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.